## சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

OS.NO.101/2024 தேதி.03.01.2025

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. துர்காதேவி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு 03.01.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | வாணி |
| க/பெ. | : | பாஸ்கரன் |
| வயது | : | 51/2025 |
| தொழில் | : | இல்லத்தரசி |
| இனம் | : | பெண் |
| கிராமம் | : | இராணிப்பேட்டை நகரம் |
| வட்டம் | : | இராணிப்பேட்டை |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

முதல் விசாரணை:–

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். பிரதிவாதி என்னிடம் ரூ.2,00,000/–யை கடனாக 11.01.2021 அன்று பெற்றுக்கொண்டதற்காக என் பெயருக்கு எழுதிகொடுத்த பிராமிசரி நோட் அசல் வா.த.சா.ஆ.1 ஆகும். நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 30.08.2023 அன்று ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினேன் அந்த அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.2 ஆகும். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.த.சா.ஆ.3 ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.